**தற்காலிக நடவடிக்கைகள்**

*விசாரணை நடைபெறும் காலத்தில்:*

- இடமாற்றம் செய்ய பரிந்துரை.
- பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 3 மாதங்கள் வரை விடுப்பு.
- பிற தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள்.

**பரிந்துரைகள் மற்றும் தண்டனைகள்**

*குற்றம் நிரூபிக்கப்பட்டால்:*

- சம்பளத்திலிருந்து இழப்பீடு பிடித்தம் செய்து பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வழங்குதல்.
- குற்றவாளி மீது எச்சரிக்கை, கண்டனம், பதவி உயர்வு / சம்பள உயர்வு நிறுத்தம், வேலை நீக்கம் போன்ற நடவடிக்கைகளை எடுக்கலாம்.
- 60 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பொய்யான / தவறான புகார்களுக்கு, புகார் அளித்தவர் மீது தேவையான நடவடிக்கை எடுக்கலாம்.

**ரகசியம் காப்பது**

பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயர், முகவரி, புகார் விவரம், விசாரணை அறிக்கை போன்றவை பொது மக்களுக்கோ, ஊடகங்களுக்கோ வெளியிடப்படக்கூடாது.

**இழப்பீடு (Compensation)**

- மன உளைச்சல், துயரம், வலி,
- வேலை இழப்பு,
- மருத்துவச் செலவுகள்,
- பாதிக்கப்பட்ட பெண்ணின் நிதி நிலை போன்றவற்றை கருத்தில் கொண்டு இழப்பீடு நிர்ணயம் செய்யப்படும்.

**உள்ளக புகார் குழு (ICC)**



**மேல்முறையீடு**

பரிந்துரை அல்லது உத்தரவால் பாதிக்கப்பட்டவர்கள் 90 நாட்களுக்குள் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

**வேலை அளிப்பவரின் கடமைகள்**

- பாதுகாப்பான பணிச்சூழல் ஏற்படுத்துதல்.
- ICC / LCC அமைத்தல்.
- பாலியல் தொல்லை தடுப்பு கொள்கையை உருவாக்கி, பொதுவான இடத்தில் காட்சிப்படுத்துதல்.
- ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- புகார்களை கையாள தேவையான வசதிகள் ஏற்படுத்துதல்.
- குற்றவாளி மீது தண்டனை நடவடிக்கை எடுத்தல்.
- நிறுவன ஆண்டு அறிக்கையில் மேற்கண்ட தகவல்களைத் தாக்கல் செய்தல்.

**தண்டனை**

சட்ட மீறலுக்கு ₹50,000 வரை அபராதம்; மீண்டும் மீறினால் உரிமம் / பதிவு ரத்து.

---

**மேலும் விரிவான தகவல்களை அறிந்துகொள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**

அவசர உதவி எண்கள்

**அரசு உதவி எண்: 181**

**சிறகுகள் உதவி எண்:** ____________________

**சிறகுகள்**

## தனித்து வாழும் பெண்கள் செயல்பாட்டுக் கூட்டமைப்பு (SWAN)

# பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013



**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு**

M: +91 8660891451 | E: swan@hrf.net.in | W: hrf.net.in

## அறிமுகம்

பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தலில் இருந்து பாதுகாப்பதற்கான, தடுப்பதற்கான, பாலியல் துன்புறுத்தல் புகார்கள் மீது தீர்வு காண்பதற்கான மற்றும் அத்துடன் தொடர்புடைய விஷயங்கள் அல்லது நிகழ்வுகள் தொடர்பான ஒரு சட்டம்.

## பாலியல் துன்புறுத்தல் செயல் என்று கருதப்படுவது எது?

- உடல் ரீதியான தொடர்பு மற்றும் முயற்சிகள்.
- பாலியல் சலுகைக்கான ஒரு கோரிக்கை அல்லது வேண்டுகோள்.
- பாலியல் அர்த்தமுள்ள கருத்துகளைக் கூறுதல்.
- ஆபாசப் படம் காட்டுதல்.
- பாலியல் தன்மை உள்ள விரும்பத்தகாத வேறு எந்த உடல்ரீதியான, வாய்மொழியான அல்லது வாய்மொழி அல்லாத செயல்கள் .
- இதர சூழல்களோடு, பாலியல் துன்புறுத்தல் தொடர்பான ஒரு செயல் அல்லது நடத்தை நிகழ்ந்திருப்பதாக தோன்றுமானால் அல்லது இருக்குமானால் பின்வரும் சூழல்கள் பாலியல் துன்புறுத்தலாக இருக்கக்கூடும்:
  - அந்தப் பெண்ணின் வேலையில் சலுகையோடு நடத்தப்படுவார் என்று உட்பொருளாக அல்லது வெளிப்படையாக வாக்குறுதியளித்தல்.
  - அந்தப் பெண்ணின் வேலையில் பாதகமாக நடத்தப்படுவார் என்று உட்பொருளாக அல்லது வெளிப்படையாக அச்சுறுத்துதல்.
  - அந்தப் பெண்ணின் தற்போதைய அல்லது எதிர்கால வேலை நிலை பற்றி உட்பொருளாக அல்லது வெளிப்படையாக அச்சுறுத்துதல்.
  - அந்தப் பெண்ணின் வேலையில் குறுக்கிடுதல் அல்லது அவருக்கு ஒரு அச்சுறுத்தலான அல்லது சங்கடமான அல்லது பாதகமான வேலைச் சூழலை ஏற்படுத்துதல்.
  - அந்தப் பெண்ணின் உடல் நலம் அல்லது பாதுகாப்பை பாதிக்கக்கூடியதாக அவமதிக்கும் வகையில் நடத்துதல்.

## பொதுவான உரிமைகள்

- எந்த பணித்தளத்திலும் எந்தப் பெண்ணும் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படக் கூடாது.
- பாதிக்கப்படுகிற எந்த ஒரு பெண்ணும் பணித் தளத்தில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான ஒரு புகாரை, உள்ளகப் புகார் குழு (ICC), உள்ளூர் புகார் குழுவிடம் (LCC) சம்பவம் நடந்த தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் எழுத்துப்பூர்வமாக ஒரு புகாரை அளிக்கலாம்.
- பாதிக்கப்பட்ட பெண் எழுத்துப்பூர்வமாக புகார் தர இயலாத நிலையில், ICC அல்லது LCC குழுவின் உறுப்பினர் அந்தப் பெண்ணிற்கு தேவையான நியாயமான அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும்.
- பாதிக்கப்பட்ட பெண், எதிர்மனுதாரர் மற்றும் சாட்சியின் அடையாளம் மற்றும் முகவரிகள், சமரசம் மற்றும் விசாரணை நடைமுறைகள் தொடர்பான எந்த ஒரு தகவலும் பொது மக்களுக்கு, பத்திரிகைகளுக்கு, ஊடகங்களுக்கு எவ்விதத்திலும் வெளியிடப்படவோ, தெரிவிக்கப் படவோ அல்லது தெரியச் செய்யப்படவோ கூடாது.
- இந்திய தண்டனைச் சட்டம் அல்லது அந்தக் காலகட்டத்தில் நடைமுறையில் உள்ள எந்த ஒரு சட்டத்தின் கீழும் குற்றச் செயல் தொடர்பாக புகார் பதிவு செய்ய முன்வரக்கூடிய பெண்ணுக்கு உதவி வழங்க வேண்டும்.

## பாலியல் துன்புறுத்தல் குறித்து ஒரு பெண் எங்கு புகார் அளிக்கலாம்?

### உள்ளக புகார் குழு (ICC)

- ஒவ்வொரு நிறுவனமும் 10க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இருந்தால் ICC அமைக்க வேண்டும்.

### உள்ளூர் புகார் குழு (LCC)

- 10க்கும் குறைவான ஊழியர்கள் உள்ள பணியிடங்களில்,
- அல்லது ICC அமைக்க முடியாத இடங்களில், மாவட்ட அதிகாரியின் தலைமையில் உள்ளூர் புகார் குழு அமைக்க வேண்டும்.

## புகார் செய்வது எப்படி?

சம்பவம் நடந்த 3 மாத காலத்திற்குள் புகார் அளிக்க வேண்டும்.

- பாதிக்கப்பட்ட பெண் புகார் செய்ய இயலாத நிலை (உடல்நிலை, மனநிலை, மரணம்) ஏற்பட்டால், உறவினர், நண்பர், சக ஊழியர், பெண்கள் ஆணையம் போன்றவர்கள் புகார் செய்யலாம்.
- புகார் எழுத்துப்பூர்வமாக 6 நகல்களுடன், சாட்சிகள் மற்றும் ஆதாரங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
- குழு 7 நாட்களுக்குள் எதிர்மனுதாரருக்கு புகாரின் நகலை அனுப்ப வேண்டும்.
- பதில் 10 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## விசாரணை நடைமுறை

- விசாரணை 90 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.
- சட்ட பிரதிநிதிகளுக்கு (Lawyers) அனுமதி இல்லை.
- குழுவுக்கு நீதிமன்ற அதிகாரங்கள் உண்டு (சாட்சி கேட்பது, ஆவணங்கள் கோருவது போன்றவை).
- விசாரணை முடிந்த 10 நாட்களுக்குள் அறிக்கை வழங்கப்பட வேண்டும்.
- பாதிக்கப்பட்ட பெண் வீட்டுப் பணியாளர் என்றால், LCC-யானது புகாரை காவல்துறைக்கு 7 நாட்களுகள் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய அனுப்ப வேண்டும்.